# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.40/2022** **நாள் : 22.08.2022**

**நெம்மேலி கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் திமர் பழுது ஏற்பட்டதால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இதனால்**
**பகுதி– 13, 14 மற்றும் 15–க்கு உட்பட்ட பகுதிகளில்**
**23.08.2022 அன்று மாலை 05.00 மணி வரை**
**குடிநீர் விநியோகம் நிறுத்தம்**

## சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்

நெம்மேலியிலுள்ள நாளொன்றுக்கு 110 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தில் கடல் நீரேற்றும் குழாயில் ஏற்பட்ட பழுதினை சீர்செய்யும் பணிகள் நடைப்பெற்று வருகிறது. இதனால் அடையார், வேளச்சேரி, பெசன்ட் நகர், திருவான்மியூர், கொட்டிவாக்கம், பாலவாக்கம், பெருங்குடி, ஈஞ்சம்பாக்கம், நீலாங்கரை, சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளுக்கு 23.08.2022 அன்று மாலை 05.00 மணி வரை குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

இதனால், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள கீழ்க்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| பகுதிப் பொறியாளர்/பகுதி-13 | கைபேசி எண்.8144930913 | அடையார், வேளச்சேரி, பெசன்ட் நகர், திருவான்மியூர் |
| பகுதிப் பொறியாளர்/பகுதி-14 | கைபேசி எண்.8144930914 | கொட்டிவாக்கம், பாலவாக்கம், பெருங்குடி |
| பகுதிப் பொறியாளர்/பகுதி-15 | கைபேசி எண்.8144930915 | ஈஞ்சம்பாக்கம், நீலாங்கரை, சோழிங்கநல்லூர் |

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர் வாரியம்